[1980 ஜூலை 30

## கொடிவேரியிலிருந்து குடி தண்ணீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 76—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரியார் மாவட்டம் கொடிவேரியில் இருந்து கோபி வட்டம், சிறுவலூருக்கும் பெருந்துறை வட்டம் குன்னத்தூர், வெள்ளரவள்ளி, திங்களூர் ஆகிய பகுதிகளுக்கும் குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்பட உள்ளது ?

(இ) இத் திட்டம் விரிவுபடுத்தப்படும் பொழுது ஊத்துக்குளி, விஜயமங்கலம் பகுதிகளும் சேர்த்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : கேள்விக்கிடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் சம்பந்தமாக ஏற்கெனவே திங்களூரில் ஒரு போராட்டம் நடந்தபொழுது அங்கே மாவட்ட கலெக்டரினுடைய ஒப்புதலின்பேரில், இவ்வாறு ஒரு திட்டம் இருக்கிறது. அதி விரைவில் செயல்படும் என்று கூறினார்கள். அது உண்மையா பொய்யா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, பெரிய கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினின்று மேற்கண்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் வழிமுறைகளை ஆய்வு செய்தபோது, பெரிய கொடிவேரி திட்டத்தின் தலைமைப் பணியிடத்திலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தூரத்தில் அவைகள் அமைந்துள்ளபடியாலும் பெரிய கொடிவேரி திட்டத்தால் பயனடையும், வழியோரக் குடியிருப்புகளின் வரிசையில் மேற்கண்ட பகுதிகள் சேர்க்கப்படாததாலும், மேலும் பெரிய கொடிவேரி தலமைப் பணியிடத்திலிருந்து இத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் அதிக செலவினங்கள் ஏற்படக்கூடும் என்பதாலும் பெரிய கொடிவேரிலிருந்து குன்னத்தூர், சிறுவலூர் திங்களூர் ஆகிய பேரூராட்சிகளுக்குக் குடிதண்ணீர் வழங்க இயலவில்லை.

ஆனால், பவானி ஆற்றிலிருந்து கோபிசெட்டிப்பாளையம் தலைமை நீர் நிலையத்திற்கு அருகாமையில் இருந்து குன்னத்தூர், சிறுவள்ளூர், கொளப்பனூர், ஊத்துக்குளி ஆகிய பேரூராட்சிகளுக்கும், 22 ஊராட்சிகளுக்கும் தண்ணீர் வழங்குவதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத் திட்டத்தின்கீழ் திங்களூர், விஜயமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கும் தண்ணீர் கொடுக்க ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணிகள் ஆகஸ்ட் 80—க்குள் முடிவு பெற்று செப்டம்பர் 80—க்குள் வாரியத்திற்கு அனுப்பப்பட்டு திட்டத்திற்கு அரசு அனுமதி தந்தபின் நிறைவேற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர அவர்களே, இந்தப் பகுதிகள் அனைத்தும் வறண்ட பகுதிகளாக இருக்கின்றன. குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் பகுதியாக இருப்பதால் அதிவிரைவில் இத்திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—50]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, முடிந்தவரையில் விரைவுபடுத்துகிறோம்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய மதிப்பீட்டுத் தொகை என்ன? இந்தத் திட்டம் உலக வங்கியினுடைய லோன் மூலமாக எடுத்து நடத்தப்படுகிறதா ? அல்லது எல்.ஐ.சி. லோன் மூலம் எடுக்கப்படுகிறதா ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே ஆய்வுப் பணிகளே இப்பொழுதுதான் ஆரம்பம் ஆகின்றன.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாதிரித் திட்டங்களுக்கு, இன்வெஸ்டிகேஷன் முடிந்து, அதற்குப் பின்னால், ஊராட்சிகளுடைய அனுமதி கிடைத்த பிறகு அதற்குப் பின்னால்தான் வேலைகள் செய்து முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போழுது ஆய்வுத் தொகைகள் ஊராட்சிகளால் கட்டப்பட்டு விட்டதா ? அல்லது இன்னும் கட்டவில்லையா ? அப்படியிருக்கும்போது, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் முடியும் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இது எப்படி பொருத்தமாக இருக்கும் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆய்வுப் பணிகள் ஆகஸ்ட் 1980-க்குள் முடிவு பெற்று, செப்டம்பர் 1980-க்குள் வாரியத்திற்கு அனுப்பப் பெற்று, திட்டத்திற்கு அரசு அனுமதி தந்த பின் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று இருக்கிறது. ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பெற்றிருக்கின்றன. ஆய்வுப் பணிகள் முடிந்த பிறகு, எவ்வளவு ரூபாய் மொத்தமாக செலவாகும் என்று சொல்வார்கள். பராமரிப்புக்கு எவ்வளவு ஆகும் என்று சொல்வார்கள். பிறகு அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தச் சடங்குகள் எல்லாம் இருக்கின்றன.

பொய்கை அணைத் திட்டம்.

*வினா எண் 77—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கன்னியாகுமரித் தொகுதியில் பொய்கை அணைத் திட்ட செயற் குறிப்பு எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) இதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) இதனால் எவ்வளவு ஏக்கர் நிலம் நிரந்தர பாசன வசதி பெறும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கை மேம்பாட்டுத் திட்டம் ரூ. 21·60 லட்சம் செலவில் துவக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

(ஆ) 1980—81ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கை மேம்பாட்டுத் திட்டம் உள்பட மற்ற சிறிய நீர்ப்பாசன திட்டங்களையும் செயல்படுத்த ரூ. 21 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்தின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிர் செய்யப்படாமல் உள்ள 582.45 ஏக்கர் தரிசு நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன் மேலும் 716.49 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும்.